**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 183/2020 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.4<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சசிரேகா | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 30.03.2022.

**முதல் விசாரணை:**

நான் தற்போது அனைத்து மகளிர் காவல்நிலையம் உடுமலையில் காவலராக பணிபுரிகிறேன். 16.09.2020 ம் தேதி நிலைய அலுவலில் இருந்தபோது நானும் காவலர் சுருதியை ரைய்டு பணிக்காக அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளருடன் உடுமலை இந்திரா நகரில் உள்ள 52 ம் நம்பர் வீட்டிற்கு எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் பகல் 12.00 மணிக்கு சென்றோம். அப்போது அங்கு கார்த்தி, பிரவினா, சகீலா மற்றும் செண்பக வள்ளி ஆகியோர் இருந்தார்கள். அப்போது அருகில் இருந்த அரையில் சேகர் மற்றும் பிருந்தா தேவி ஆகிய இருவரும் அரைகுறை ஆடையுடன் கட்டிலில் இருந்தார்கள். பின்பு இது குறித்து பிருந்தா தேவியிடம் ஆய்வாளர் விசாரித்தபோது தனது மகனுக்கு உடல் நிலை சரியில்லாததால் இரண்டு மாதங்களுக்கு முன்பு வேலை வாய்ப்பு முகாம் நடத்தி வந்த செண்பகவள்ளி மூலம் பணத்திற்காக மேற்படி செயலில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டார். அப்போது மேற்படி சேகருடன் தனிமையில் இருப்பதற்காக பெற்றுக்கொண்ட ரூ.500/- அங்கு பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் நான் மற்றும் சுருதி முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார் அதில் முதலாவது

கையெழுத்து என்னுடையது மேற்படி கைப்பற்றுதல் மகசர் அசாஆ.1 ஆகும். பின்பு எதிரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்களுடன் காவல் நிலையம் வந்தோம். பின்பு காவல் நிலையத்தில் தானாக முன்வந்து சகீலா என்பவர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் அதில் நானும் சுருதியும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். மேற்படி சகீலா சம்பவத்திற்கு பயன்படுத்திய காரையும், பணம் ரூ.500/—யையும் ஆஜர் செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.2 ஆகும். பின்பு சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் எங்கள் முன்னிலையில்ஆய்வாளர் தயார் செய்தார் அதிலும் நானும் சுருதியும் கையெழுத்து செய்தோம் என்னுடைய 1 வது கையெழுத்து அது அசாஆ.3 ஆகும். பின்பு செண்பக வள்ளி என்பவரிடம் இருந்து என் முன்னையில் ஆய்வாளர் செண்பக வள்ளி ஆஜர் படுத்திய ரூ.200/—( 1— 100, 2— 50 ரூபாய்) படிவம் 91 மூலம் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கார் தான் அன்று சகீலா ஆஜர் படுத்தியது அது சாபொ.1 ஆகும். சகீலா விடம் இருந்து கைப்பற்றப்பட்ட ரூ.500/— சாபொ.2 ஆகும். பிருந்தா தேவியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ரூ.500/— சாபொ.3 ஆகும். செண்பகவள்ளியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ரூ.200/— சாபொ.4 ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சுருதி என்ற காவலர் மற்றும் ஆய்வாளர் ரோந்துக்கு சென்றோம். உடுமலை காவல் நிலையத்தில் இருந்து கலைச்செல்வன் என்ற காவலரும் உடன் வந்தார். உடுமலை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இருந்து காலை 11.00 மணிக்கு ஆய்வாளர் உடன் நானும் சுருதியும் சென்றோம். கலைச்செல்வன் என்ற காவலர் எங்களுடன் பைக்கில் வந்தார். நாங்கள் ரோந்து அலுவலாக நகரத்தில் இருந்தபோது கிடைத்த தகவலின் படி சம்பவ இடத்திற்கு சென்றோம். சரியாக நேரம் தெரியவில்லை சுமார் 11.45 மணி இருக்கும். சம்பவ இடத்திற்கு 12.00 மணிக்கு சென்றோம். இந்திரா நகர் என்ற பகுதியில் மக்கள் நடமாட்டமும் தொழில் நிறுவனங்கள் நிறைந்த இடம் என்றால் சரிதான். எங்களுக்கு கிடைத்த தகவலில் மேற்படி 52—ம் நம்பர் வீட்டில் முகவரி கிடைத்தது. ஆய்வாளர் அந்த வீட்டை அடையாளம் கண்டார் 52—ம் நம்பர் வீட்டில் கதவு கிழக்கு பார்த்து உள்ளது. நாங்கள் சென்றபோது முன்பக்க கதவு உள் தால் போட்டிருந்தது. மேற்படி வீட்டிற்கு இரண்டு பக்கமும் வழி உள்ளது நான் மாடிப்படி ஒட்டி உள்ள வழியில் நின்று கொண்டிருந்தேன் மற்றொரு பகுதியில் உள்ள கதவுன் முன் சுருதி மற்றும் ஆய்வாளர் நின்று கொண்டிருந்தார்கள். நான் நின்று கொண்டிருந்த கதவின் வழியே வந்து மாடி வழியாக ஓடியபோது நான் தான் பிடித்தேன். ஒரு ஹால் மற்றும் 3 அறைகள் உள்ளது (இரண்டு பெட்ரூம், ஒரு கிச்சன்), ஹாலில் சகீலாவும்

கார்த்தியும் இருந்தார்கள். சின்ன பெட்ரூமில் பிரவினா என்ற பெண் இருந்தார். செண்பக வள்ளியை பிடித்துக்கொண்டு மெயின் பெட்ரூமை திறந்தபோது சேகரும் பிருந்தாதேவியும் அரைகுறை ஆடையுடன் இருந்தார்கள். எதிரிகளிடம் சம்பவ இடத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை. பாதிக்கப்பட்ட பெண்ணிடம் இருந்து சம்பவ இடத்தில் வைத்து பொருள் கைப்பற்றப்பட்டது. அருகில் இருந்த வீடுகள் பூட்டி இருந்ததால் அவர்கள் யாரையும் சாட்சியாக இருக்குமாறு கேட்கவில்லை. நாங்கள் சம்பவ இடத்திற்கு போகாத காரணத்தால் தான் பொது ஜன சாட்சிகள் யாரையும் அழைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. படிவம் 91ல் பிருந்தாதேவிடம் கைப்பற்றப்பட்ட ரூபாயின் எண் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி பணத்தை வழக்கிற்காக நாங்களே தயார் செய்ததால் தான் ரூபாய் நோட்டின் எண் படிவம் 91 குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் சகிலா என்பவரிடம் முதன் முதலில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. சகிலாவிடம் 15.00 மணி முதல் 15.30 மணி வரை ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. சகீலாவிடம் பெறப்பட்ட ரூபாய் நோட்டு என்னும் குறிப்பிடப்படவில்லை என்றால் அது குறித்து ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் நான் மட்டும் இருந்ததால் என் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அனைத்து மகளிர் காவல் நிலையம் அருகில் தான் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். சகீலா என்பவரிடம் இருந்து காரும் கைப்பற்றப்பட்டுள்ளது அதன் உரிமையாளர் அவர் தான் என்று கூறினார். நாங்கள் மேற்படி காரின் RC Book., insurance போன்ற ஆவணங்களை வாங்கினோமா என்றால் இல்லை. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட கார் 2ம் எதிரியுடையது என்று சொன்னார் என்றால் விசாரணையின்போது மேற்படி விவரத்தை சகீலா சொல்லவில்லை. மேற்படி கைப்பற்றப்பட்ட காருக்குள் வைத்து எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் பாதிக்கப்பட்ட பெண்கள் விசாரணையின்போது தங்களை மேற்படி காரின் மூலம் அழைத்து வந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள். நாங்கள் மேற்படி வழக்கில் ரோந்து சென்று எதிரிகளை கைது செய்து பொருட்களை கைப்பற்றியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல உண்மையாகவே நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றிருந்தால் பொது ஜன சாட்சிகள் முன்னையில் பொருட்களை கைப்பற்றி வாக்குமூலம் பெற்று விசாரணை செய்திருப்போம் என்றால் சரியல்ல. சாட்சிகளை விசாரணை செய்துவிட்டு சம்பவ இடத்திற்கு 16.00 மணிக்கு சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் செய்தோம். அப்போதும் பொது ஜன சாட்சிகளை சாட்சிகளா ஏன் விசாரிக்கவில்லை என்றால் அருகில் இரண்டு வீடுகள் இருந்தது அதுவும் பூட்டி இருந்தது.

நாங்கள் சம்ப இடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து அனைத்து ஆவணங்களையும் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியுடன் உடுமலை காவல் நிலையத்தில் உள்ள காவலருக்கு உள்ள விரோதத்தின் காரணமாகவும் புள்ளிவிவர கணக்கிற்காகவும் பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.